

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண் - 21




## அறிவிப்புகள்

## 2022 - 2023

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண் - 21

## அறிவிப்புகள்
## 2022-2023

**எ.வ. வேலு**
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்

## நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பாக 18 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

மேலும், இந்த அறிவிப்புகளை வெளியிட அனுமதி தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எ.வ.வேலு**

**பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்**

1. செங்கல்பட்டு நகரத்தை திருச்சி, புதுக்கோட்டை, மானாமதுரை வழியாக தூத்துக்குடி துறைமுகத்துடன் இணைக்கும் துறைமுக சாலையை நான்கு வழித் தடச்சாலையாக அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.4கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

தென் தமிழகத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி துறைமுகத்தை, வட பகுதியில் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள செங்கல்பட்டு நகரத்துடன், துறைமுக இணைப்புச் சாலையால் இணைப்பதன் மூலம் தொழிற்சாலைகளுக்கு தங்கு தடையற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வசதிகளை அளிக்க இயலும்.

80கி.மீ. நீள துறைமுக இணைப்புச்சாலை அமைப்பதன் மூலம் பயணதூரம் மற்றும் நேரத்தை, வெகுவாக குறைக்க (Detailed Project Report with Techno Economic Feasibility) தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு உள்ளிட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.4 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

இந்த செங்கல்பட்டு – தூத்துக்குடி வழித்தடத்தில் இடம்பெற்றுள்ள தேசிய நெடுஞ்சாலைகளையும் இதே போன்று மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த துறைமுக இணைப்புச்சாலை அமைப்பதன் மூலம், தென்தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக ஏதுவாகும்.



2. கோயம்புத்தூர், பொள்ளாச்சி, பழனி, ஆத்தூர், காரியாப்பட்டி வழியாக தூத்துக்குடி துறைமுகத்துடன் இணைக்கும் தொழிற்தட– துறைமுக சாலையை நான்கு வழித் தடச்சாலையாக அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.4கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

தென் தமிழகத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி துறைமுகத்தை, மேற்கு பகுதியில் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள கோயம்புத்தூர், திருப்பூர் நகரங்களுடன் துறைமுகச்சாலை அமைத்து இணைப்பதினால், மேற்கு தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகும்.

இந்த துறைமுக இணைப்புச்சாலை 85கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும். முதற்கட்டமாக, ரூ.4 கோடி மதிப்பில் (Detailed Project Report with Techno Economic Feasibility) தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு உள்ளிட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

இந்த கோயம்புத்தூர் - தூத்துக்குடி வழித்தடத்தில் இடம்பெற்றுள்ள தேசிய நெடுஞ்சாலைகளையும் இதேபோன்று மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



3. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (CMRDP) கீழ் நடப்பாண்டில் 150கி.மீ சாலைகளை நான்கு வழித்தடமாகவும், 600கி.மீ. சாலைகளை இரு வழித்தடமாகவும் ரூ.2300கோடி மதிப்பில்அகலப்படுத்திமேம்படுத்தப்படும்.

2021 – 2022ம் ஆண்டு அறிவிப்புகளின்படி முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் தாலுகா தலைமையிடங்களை இணைக்கும் மாநில நெடுஞ்சாலைகள், அடுத்த 10 ஆண்டுகளில் 2200கி.மீ. நான்கு வழித்தட சாலைகளாகவும் மற்றும் 6700கி.மீ. இரண்டு வழித்தட சாலைகளாகவும் அகலப்படுத்தப்படும்.

இதன் இரண்டாம் கட்டமாக நடப்பாண்டில் 150கி.மீ சாலைகளை ரூ.1500கோடி மதிப்பில் நான்கு வழித்தட சாலைகளாகவும் 600கி. மீ. சாலைகளை ரூ.800கோடி மதிப்பில் இரு வழிசாலைகளாகவும் அகலப்படுத்த

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால், போக்குவரத்து நெரிசல் குறைவதோடு தங்கு தடையற்ற பாதுகாப்பான போக்குவரத்து உறுதிப்படுத்தப்படும்.

மேலும் இத்திட்டத்தில் தொழிற்சாலைகள் நிறைந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் மாநகரத்தில் உற்பத்தி தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும் தொழிற்துறையை ஊக்குவிக்கவும் ரூ.300கோடி மதிப்பில் நான்கு வழிச் சாலைகள் அமைக்கப்படும்.



**4. சென்னை அண்ணா சாலையில், 5 குறுக்கு சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வண்ணம் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டச் சாலை ரூ.485கோடி மதிப்பில் அமைக்கப்படும்.**

சென்னை அண்ணா சாலையில், தேனாம்பேட்டை முதல் எல்டாம்ஸ் சாலை சந்திப்பு, எஸ்.ஐ.இ.டி கல்லூரி சாலை சந்திப்பு, செனொடாப் சந்திப்பு, நந்தனம் சந்திப்பு மற்றும் சி.ஐ.டி. சாலை சந்திப்புக்களை கடந்து சைதாப்பேட்டை பேருந்து நிலையம் வரை ரூ.485கோடி மதிப்பில் உயர்மட்டச் சாலை அமைக்கப்படும். இதனால் தடையற்ற சீரான வாகன போக்குவரத்து உறுதி செய்யப்படும்.

5. பெருநகர சென்னை மாநகரப்பகுதியில்

- கலங்கரை விளக்கம் முதல் கிண்டி வரை உயர்மட்ட சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.45 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.
- பெரிய தெற்கத்திய சாலையில் OTA அருகே மேம்பாலம் மற்றும் கோயம்பேடு நடைமேம்பாலம் அமைக்க ரூ.25இலட்சம் மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு / திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகரப்பகுதியில், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக

- கலங்கரை விளக்கம் முதல் கிண்டி வரை உயர்மட்ட சாலை அமைப்பதற்கு ரூ.45இலட்சம் மதிப்பில் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.



- பெரிய தெற்கத்திய சாலை, எம்.கே.என். சாலை மற்றும் OTA சந்திப்பில் மேம்பாலம் அமைப்பதற்கும் ரூ.15 இலட்சம் மதிப்பில் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.
- கோயம்பேடு மேம்பாலம் அருகே நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்க ரூ.10இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

6. பெருநகர சென்னை மாநகரப்பகுதியில்

- பூந்தமல்லி காட்டுப்பாக்கத்தில் குன்றத்தூர் சாலை சந்திப்பில் மேம்பாலம் ரூ.322 கோடி மதிப்பிலும்
- பாடி மேம்பாலம் அருகில் உள்ள, இரயில்வே மேம்பாலத்தினை அகலப்படுத்துதல் பணி ரூ.100 கோடி மதிப்பிலும்
- தாம்பரம் சண்முகம் சாலை அருகே இணைப்புச் சாலை ரூ.10 கோடி மதிப்பிலும் மேற்கொள்ளப்படும்.

- பூந்தமல்லி காட்டுப்பாக்கத்தில் குன்றத்தூர் சாலை சந்திப்பில் ரூ.322கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டப்படும்.
- சென்னை உள்வட்டச் சாலையில் பாடி மேம்பாலம் அருகில் உள்ள, இரயில்வே மேம்பாலத்தினை ரூ.100கோடி மதிப்பில் இரு ஐந்து வழித்தடமாக அகலப்படுத்தப்படும்.



- தாம்பரம் சண்முகம் சாலையை சென்னை திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் சாலை ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. பெருநகர சென்னை மாநகரப்பகுதியில் 4 இடங்களில் ரூ. 56 கோடி மதிப்பில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகரப்பகுதியில் உள்வட்டச் சாலையில், செந்தில் நகர் சந்திப்பு, டெம்பிள் பள்ளி சந்திப்பு, கேந்த்ரிய வித்யாலயா பள்ளி மற்றும் நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு ஆகிய இடங்களில், நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் ரூ.56 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.



8. இரயில்வே மேம்பாலங்கள்

- இரயில்வே மேம்பாலங்கள் எட்டு மாவட்டங்களில் 12 இடங்களில் ரூ.577.27கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.
- விரிவான திட்ட அறிக்கை முடிக்கப்பட்ட 7 இடங்களில் இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- 2 மாவட்டங்களில் இரயில்வே மேம்பாலம் கட்ட ரூ.86இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டம் சேடப்பாளையம், கரவழிமதப்பூர் மற்றும் ராசிப்பாளையம், சேலம் மாவட்டம் வாழப்பாடி, திருவள்ளூர் மாவட்டம் சின்னக்காவணம், நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம், திருச்சி மாவட்டம் திருச்சி மற்றும் காட்டூர், திருப்பத்தூர் மாவட்டம் குடியானகுப்பம்,

திருவாரூர் மாவட்டம் நீடாமங்களம் மற்றும் வேலூர் மாவட்டம் கூடாநகரம் மற்றும் ஜாப்பராபேட்டை ஆகிய பகுதிகளில் இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக

- மொத்தம் 12 இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் ரூ.577.27கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

- செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர், கோயம்புத்தூர் மாவட்டம் சேமந்தப்பாளையம், கடலூர் மாவட்டம் கம்மியம்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் பழனி, கரூர் மாவட்டம் குளித்தலை நகரத்தில், திருநெல்வேலி மாவட்டம் காவல் கிணறு மற்றும் திருவள்ளூர் மாவட்டம் அரிச்சந்திராபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக

- விரிவான திட்ட அறிக்கை முடிக்கப்பட்ட 7 இடங்களில் இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



- ஈரோடு மாவட்டம் பாசூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் கூட்டேரிபட்டு இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் கட்ட, முதற்கட்டமாக ரூ.86இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

9. புறவழிச்சாலைகள்

- 3 நகரங்களுக்கு புறவழிச்சாலைகள் ரூ.500கோடி மதிப்பில் அமைக்கப்படும்
- 2 நகரங்களுக்கு புறவழிச்சாலைகள் அமைக்க ரூ.40இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சாலை பாதுகாப்பினை மேம்படுத்தவும் கோயம்புத்தூர் மாநகருக்கு மேற்கு வட்டச் சாலை பகுதி–1, திருச்செங்கோடு நகருக்கு மற்றும் திருவண்ணாமலை நகருக்கு புறவழிச்சாலை ரூ.500கோடி மதிப்பில் அமைக்கப்படும்.
- ஈரோடு நகருக்கு கிழக்கில் மற்றும் தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்க முதற்கட்டமாக ரூ.40இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.



10. "அனைத்து காலநிலைகளிலும் தங்கு தடையற்ற போக்குவரத்து" என்ற முதலமைச்சரின் முத்தாய்ப்பான திட்டத்தின் கீழ் 435 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக ரூ.1105கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

- காலநிலை மாற்றங்களால் ஏற்படும் வெள்ள பெருக்கினை கையாளும் விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அனைத்து காலநிலைகளிலும் தங்கு தடையற்ற போக்குவரத்து திட்டம் (Chief Minister All Season Uninterrupted Connectivity Scheme) என்ற முத்தாய்ப்பான திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் உள்ள அனைத்து தரைப்பாலங்களும் உயர் மட்ட பாலங்களாக 2026 ஆண்டிற்குள் கட்டப்படும்.
- ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 349 தரைப்பாலங்களை ரூ.705கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்களாக கட்டப்படும்.

• நபார்டு வங்கி கடனுதவியுடன் 86 தரைப்பாலங்களை ரூ.400கோடி மதிப்பில் உயர்மட்ட பாலங்களாக கட்டப்படும்.



**11. ஈரோடு, கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் மொத்தம் 9 ஆற்றுப் பாலங்கள் ரூ.136.32கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஈரோடு மாவட்டம், நடுப்பாளையம், வண்டிப்பாளையம், தொட்டிப்பாளையம், சுடக்கரை, ஈ.செட்டிப்பாளையம், மூணாம்பள்ளி, சுட்டிக்கல்மேடு மற்றும் ஆயிபாளையம் ஆகிய இடங்களில் கீழ்பவானி கால்வாயின் குறுக்கே ஏற்கனவே உள்ள பழைய குறுகிய பாலங்களுக்குப் பதிலாக 8 உயர்மட்டப் பாலங்களும், கரூர் மாவட்டம் நெரூரையும், திருச்சி மாவட்டம் உன்னியூரையும் இணைக்கும் வகையில் காவேரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஆகிய 9 உயர்மட்டப் பாலங்கள் ரூ.136.32கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

12. சுற்றுலா பகுதி சாலை மேம்பாடு

- உதகமண்டலம் நகருக்கு மாற்று பாதை ரூ.70 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.
- விருதுநகர் மாவட்டம் பக்தர்கள் பாதயாத்திரை செல்ல நடைபாதை மற்றும் கோவில் கிரிவலப் பாதை போன்ற பணிகள் ரூ.35கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.
- ஜமூனாமரத்தூர் மலைச்சாலை மற்றும் கொடைக்கானல் மலைச்சாலைகளை மேம்பாடு செய்ய ரூ.1.20 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் நகருக்கு செல்ல மாற்று பாதை ரூ.70கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களின் நலன்



கருதி ரூ.30கோடி மதிப்பீட்டில் நடைபாதை அமைக்கப்படும்.

- விருதுநகர் மாவட்டத்தில் தென்திருப்பதி என்று அழைக்கப்படும் ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் கிரிவலப் பாதை ரூ.5கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும்.
- திருவண்ணாமலை மாவட்டம் பரமனந்தல் முதல் ஜமூனாமரத்தூர் வழியாக வேலூர் மாவட்டம் அமிர்தி வரை உள்ள 77.40கி.மீ. நீள மலைச்சாலையை அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்தல் தொடர்பாக ரூ.70இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.
- திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலை பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டு போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், தேவையான இடங்களில் வாகன நிறுத்தங்களை அமைக்கவும் ரூ.50இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

13. கன்னியாகுமரி மாவட்டத்தில்

- ரூ.41.75கோடி மதிப்பில் மீனவர் பகுதியில் கடலரிப்பை தடுக்க தடுப்பு சுவர் கட்டப்படும்
- மீனவர்களின் நீண்ட நாளைய கோரிக்கை படி 47 கிராமங்களை இணைக்க புதிய இணைப்பு சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.75 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளத்தினால் சேதமடைந்த நீரோடி இரயுமன்துறை மற்றும் பொட்டல் புத்தன்துறை பள்ளம்துறை கடலோர சாலைகளில் ரூ.41கோடி மதிப்பீட்டில் கடலரிப்பை தடுக்க தடுப்பு சுவர் கட்டப்படும்.
- கன்னியாகுமரி மாவட்டம், ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை 47கிராமங்களை இணைத்து புதிய இணைப்பு சாலை அமைக்க



வேண்டும் என்பது மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். இக்கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக சின்னமுட்டம் துறைமுகம், குளச்சல் துறைமுகம் மற்றும் தேங்காய்பட்டிணம் துறைமுகம் ஆகிய துறைமுகங்களை இணைக்கும் வகையில் 79கி.மீ. நீள புதிய இணைப்பு சாலை அமைக்க ரூ.75இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 14. மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் பசுமலையில் புதிய சாலை ரூ.26.33கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

தென் மாவட்டங்களிலிருந்து மதுரை மாநகருக்குள் வரும் வாகனங்களால் திருப்பரங்குன்றம் பசுமலை அருகே ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக புதிய இரு வழிச்சாலை ரூ.26.33கோடி மதிப்பில் அமைக்கப்படும்.



## 15. வேலூர் சி.எம்.சி. எதிரில் சுரங்கபாதை மற்றும் கரூர் பேருந்து நிலையத்தில் நடைமேம்பாலம் அமைக்க ரூ.25இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

வேலூர் மாவட்டத்தில் சி.எம்.சி மருத்துவமனைக்கு உள்/வெளி செல்லும் வழி அருகே நோயாளிகள் சாலையை கடக்க ஏதுவாக சுரங்கப்பாதை அமைக்க முதற்கட்டமாக ரூ.15இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

கரூர் மாவட்டத்தில் கரூர் பேருந்து நிலையம் அருகே நடை மேம்பாலம் அமைக்க ரூ.10இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

16. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – IIIன் மூலமாக 400கி.மீ. நீள முக்கிய மாநில சாலைகளை நான்கு வழித்தடமாக அகலப்படுத்த பன்னாட்டு நிதி நிறுவன கடனுதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் III–ன் மூலமாக மாவட்ட தலைநகரங்கள், மாவட்ட முக்கிய நகரங்கள், முக்கிய தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் வளர்ச்சி அடைந்து வரும் தொழிற்சாலை பகுதிகளை இணைக்கும் 400கி.மீ. நீளமுள்ள முக்கிய மாநில சாலைகள், நான்கு வழித்தட சாலைகளாக பன்னாட்டு நிதி நிறுவன கடனுதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.



17. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மூலம்

- படகுப் போக்குவரத்தை மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்,
- இராமேஸ்வரத்தில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்

1076 கிலோமீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் சாத்தியமான இடங்களில் பாதுகாப்பான குறைந்த தூர பயணிகள் படகுப் போக்குவரத்து மற்றும் கடல்சார் விளையாட்டுகளை துவக்குவதற்கு ஏதுவாக ஆலோசக நிறுவனத்தை தேர்ந்தெடுத்து தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை (Technical Feasibility Report and Detailed Project Report) தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தென்மாவட்டபகுதியில்,நடைபெற்றுவரும் சிறு துறைமுகங்களின் வளர்ச்சிப் பணிகளை கருத்திற்கொண்டு, இராமநாதபுரம் மாவட்டம்,

இராமேஸ்வரம் சிறு துறைமுக பகுதியில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் புதியதாக 2580 சதுர அடியில் ஒரு புதிய துறைமுக நிர்வாக அலுவலகக் கட்டிடம் கட்டப்படும்.



## 18. தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனத்தின் தரத்தை நவீன வசதிகளுடன் ரூ.5கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்.

- தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கீழ், தூத்துக்குடியில் இயங்கி வரும் தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Maritime Academy) கப்பல் போக்குவரத்து இயக்ககத்தின் அனுமதியை பெற்று, ஆண்டுதோறும் 80 இளைஞர்களுக்கு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கப்பல்களில் பணிபுரிவதற்கு 6 மாத கால தங்கிப் பயிலும் கப்பல் மாலுமி பயிற்சி (6 Months Residential General Purpose Rating Course) அளித்து வருகிறது.
    - இந்நிறுவனம் மேற்கொள்ளும் பயிற்சிகளின் தரத்தினை ரூ.5கோடி செலவில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

கொல்லிமலைச் சாலையின் எழில்மிகு தோற்றம்



**சாலை கட்டமைப்பினை மேம்படுத்துவோம் !**

**பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்வோம் !!**